# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண். 24–2015**

**நாள்: 25**.08.2025

**பெயர் : சித்ரா**

**DW: 1**

**குறுக்கு விசாரணை**

**அரசு பிற்படுத்தப்பட்ட நலத்துறையில் விடுதியின் காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் MA B. Ed படித்து உள்ளேன். வாதியிடம் எனது தாயார் மற்றும் தகப்பனார் கடன் வாங்கும் சமயங்களில் நான் அவர்களுடன் சென்றது இல்லை. எனது பெற்றோர்கள் வாதியிடம் எப்போழுது என்ன தொகை கடன் பெற்றார்கள் என்பதற்கும் வட்டி செலுத்தியதிற்கும் தனியாக கணக்குகள் எதும் வைத்து இருக்கவில்லை. எனது பெற்றோர்கள் வாதியிடம் மொத்தமாக எவ்வளவு கடன் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது பெற்றோர்கள் உயிருடன் இருந்த வரையில் அவர்கள் தான் வாதியிடம் நேரடியாக தொடர்பு கொண்டு இருந்தார்கள். வழக்கிற்கும் பிறகும் நான் இது நாள் வரையில் வாதியை நேரில் சந்திந்து கணக்கு வழக்கு பார்க்கவில்லை. எதிர் வழக்கு உரையில் எனது தாயார் வாதிக்கு ரூ. 2,15,000 கொடுக்க வேண்டும் என கூறி இருப்பது எதன் அடிப்படையில் என கேட்டால் எனது தாயார் என்னிடம் சொல்லி இருக்கிறார். எனது தாயார் வாதியிடம் எப்பொழுது எந்த தொகையை பெற்று திரும்பிக்கொடுத்தார் என்றும் ரூ. 2,15,000 கொடுக்க வேண்டும் என்பது எவ்வாறு கணக்கிட பட்டது என்று என்னால் கூற முடியாது. வாதி தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்ட்ட லோகநாதன், குணசேகரன் ஆகியவர்களை அறிமுகம் உண்ட என்றால் எனக்கு தெரியாது. எனது பெற்றோர்களுக்கு அவர்களை தெரியுமா என்றால் தெரியாது என்று கூறி இருக்கிறார்கள். எனது தாயார் மேற்படி விவரத்தினை அவர் தாக்கல் செய்த எதிர் வழக்கு உரையில் குறிப்பிட்டு தெரிவித்து உள்ளார். அவர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரித்தது எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 முத்திரைத்தாளில் உள்ளது எனது தாயாரின் கையொப்பம் தான். அது என் தாயாரின் பெயரில் தான் வாங்கப்பட்டு உள்ளது. நகை விலை கணக்கிடுவது பற்றி எனக்கு அனுபவம் கிடையாது. பி.வா.சா.ஆ 2 பற்றி என்னால் சொல்ல முடியும். பி.வா.சா.ஆ 2 ல் முதலில்**

கூறிப்பிட்டு உள்ளது தங்கத்தின் எடை. இரண்டாவதாக கூறிப்பிட்டு உள்ளது பற்றாக வைத்துள்ள தொகை பி.வா.சா.ஆ 2 சமயத்தில் எவ்வளவு எடை நகை வாதியிடம் விற்கப்பட்டது என்று எனக்கு நியாபகம் இல்லை. 2012 ஆம் ஆண்டு சமயத்தில் நகை தோரயமாக 1 சவரன் 15,000 முதல் 20,000 வரை இருந்து இருக்கலாம். பி.வா.சா.ஆ 2ன் படி வாதியிடம் எவ்வளவு கிராம் விற்கபட்டது என்று என்னால் கூற முடியாது. பி.வா.சா.ஆ 2ல் 157.500 என கூறிப்பிட்டு இருப்பது தொகை அல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2ல் எனது பெற்றோர்கள் பெயர் எதும் கூறிப்பிடபடவில்லை. மேலும் அதில் மொத்த கடன் தொகை மற்றும் உள்ள பாக்கி விவரம் குறிப்பிடபடவில்லை. பி.வா.சா.ஆ 2 என்பது வாடிக்கையாளர்களுக்காக தோராயமாக வழங்கப்படும் எஸ்டிமேட் என்றாலும் எனது பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. எனது பெற்றோர்கள் வாதியின் கடைக்கு அடிக்கடி சென்று வரும் சமயங்களில் முன்றாம் நபருக்கு எழுதி வைத்து இருந்த எஸ்டிமேட்யை வாதிக்கு தெரியாமல் எடுத்து கொண்டு வந்து விட்டனர் என்றால் சரியல்ல. அதை வழக்கிற்கு தவறாக பயன்படுத்தப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 கணக்கு தாளில் வாதியின் கையொப்பம் இல்லை. எனது பெற்றோர் பெயரும் இல்லை. ஆனால் அதை வாதி தான் கைப்பட எழுதி கொடுத்தார். பி.வா.சா.1 21.07.2014 அன்று எழுதி கொடுக்கப்பட்டது. பி.வா.சா.ஆ 1ல் குறிப்பிட்டுள்ள தொகைகள் குறித்து என்னால் விளக்கம் சொல்ல முடியும். ரூ. 1,00,000 கடனுக்கு 20.10.2011 முதல் 28.12.2011 வரை 56,000 14 மாதங்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக ரூ. 50,000 15.11.2010 முதல் 23.02.2012 வரை 15 மாதங்களுக்கு 30,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. அதற்கு பிற்பாடு உள்ள குறிப்புகள் குறித்து என்னால் குறிப்பாக விளக்கம் கூற முடியாது. பி.வா.சா.ஆ 1ன் படி நானோ எனது பெற்றோர்களோ கொடுக்க வேண்டிய பாக்கி குறித்து தனியாக கணக்கு போட்டு பார்க்கவில்லை. காரணம் பி.வா.சா.ஆ 1ன் பின் பகுதியில் ரூ. 2,15,000 பற்றிய பாக்கி குறிப்பு உள்ளது. நான் குறிப்பிடும் கணக்கு விவரங்களும் பி.வா.சா.ஆ 1ல் குறிப்பிட்டுள்ள கணக்கு விவரங்களும் மாறுப்பட்டு உள்ளது என்றும் வழக்கிற்க்காக மேற்படி ஆவணம் வாதியால் வழங்கப்பட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் எனது பெற்றோர்களால்

வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கொடுக்க வேண்டிய தொகை குறித்து எனது தகப்பனார்க்கும் வாதிக்கும் பேச்சு வார்த்தையில் முறிவு ஏற்பட்டு விட்டது எப்போது என்றால் வருடம மாதம் தேதி எனக்கு தெரியாது. அந்த பேச்சு வார்த்தைக்கு பிறகு தான் எனது தாயார் வழக்கு சொத்தை பொருத்து எனது பெயருக்கு வா.சா.ஆ 4 ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வ.சா.ஆ 4 எழுதி வைக்கும் மாறு எனது தாயாரிடம் நான் கேட்கவில்லை. சொத்திற்கான மூல பத்திரம் வாதியிடம் தான் உள்ளது. வாதியிடம் பெற்ற கடனை மோசடி செய்வதற்காக வா.சா.ஆ 4 பெயர் அளவிற்கு எனது பெயரில் எழுதி வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் வாதியிடம் பெற்ற கடன் தொகை ரூ. 8,00,000தினை வட்டியுடன் திரும்ப செலுத்தி விடுவதாக ஒப்பு கொண்டு தான் சாட்சிகள் முன்னிலையில் வா.சா.ஆ 1 எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.1 மற்றும் 2 ஆவணங்கள் அடிப்படையில் எனது பெற்றோர்கள் கொடுக்க வேண்டிய பாக்கி தொகையை திரும்ப செலுத்தி மூல ஆவணத்தினை திரும்ப பெறுவதற்கும் வெற்று முத்திரைத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணத்தையும் திரும்ப பெறுவதற்கு வழக்கு நடவடிக்கை எதும் எடுக்கவில்லை. வ.சா.ஆ 1 காலத்தில் சொத்தின் மதிப்பு சரியாக நிர்ணைக்க பட்டு உள்ளது என்பதும் தற்போது வழக்கிற்காக சொத்தின் மதிப்பு ரூ.25,00,000 இருந்து என்று வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. எனவே வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல.